THE HINDU

PAGE NO: 09 DATE: 06.08.21

CHENNAI THE HINDU
FRIDAY, AUGUST 6, 2021

# University V-C meets L-G, seeks help in land allocation

## Gurmeet Singh discusses development proposals

SPECIAL CORRESPONDENT
PUDUCHERRY

A team of Pondicherry University officials, led by Gurmeet Singh, Vice-Chancellor, met Dr. Tamilisai Soundararajan, Lieutenant Governor of Puducherry and Chief Rector of Pondicherry University, at Raj Nivas to discuss various development proposals of the University.

The Vice-Chancellor requested her intervention in expediting the process of allocation of about 15 acres of land by the government in addition to the already allocated 5 acres for the establishment of an exclusive campus of Pondicherry University in Karaikal.

The University also sought a portion of the existing land to an extent of 3 acres behind the campus of the Arignar Anna Government Arts College, Karaikal, for the construction of two hostels – with 136 capacity/ground plus five floors each (for boys and girls) – to benefit the students.

Mr. Singh also appealed to Ms. Tamilisai for assistance in securing two tracts of land to an extent of 8 acres adjacent and opposite to the JIPMER extension campus near bypass road in Karaikal, so as to enable Pondicherry University to establish the Pondicherry University Community College and staff quarters, common facilities for the Pondicherry University Community College Campus in Karaikal.



**Institution matters:** Pondicherry University Vice-Chancellor Gurmeet Singh calling on Lt. Governor Tamilisai Soundararajan. ▪ SPECIAL ARRANGEMENT

In Mahe, the University is looking to expedite the process of transferring the allotted 2 acres land at Chalakkara Revenue Village for the establishment of the Pondicherry University Community College.

According to a press release from the University, the Lt. Governor agreed to look into the proposals and promised her support to elevate the University to be one of the country's top institutions of higher learning.

Mr. Singh also invited the Lt. Governor and Chief Rector to inaugurate the indoor stadium built at Pondicherry University later this month.

S. Balakrishnan, Director (Studies, Educational Innovation and Rural Reconstruction) and B. Chithra, Registrar, accompanied the Vice-Chancellor.

HINDU TAMIL

PAGE NO: 05

DATE: 06.08.21

புதுச்சேரி பல்கலைக்கழக மேம்பாட்டுக்கு

# காரைக்கால், மாஹேவில் கூடுதல் நிலம்

## ஆளுநரிடம் பல்கலை. துணைவேந்தர் கோரிக்கை

புதுச்சேரி

புதுவை மத்தியப் பல் கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் குர்மீத் சிங், துணை நிலை ஆளுநரும் மற்றும்புதுவை பல் கலைக்கழக தலைமை காப்பாளருமான தமிழிசையை சந்தித்து பேசினார்.

அப்போது துணைவேந்தர்," புதுவை பல்கலைக்கழக காரைக்கால் மைய மேம்பாட்டிற்கு கூடுதலாக 15 ஏக்கர் நிலம் வழங்க வேண்டும்.

காரைக்கால் அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி அருகில் மாணவர்களுக்கான புதிய தங்கும் விடுதிகள் கட்ட 3 ஏக்கர் நிலம் வழங்க வேண்டும்.

காரைக்கால் ஜிப்மர் விரிவாக்க வளாகத்திற்கு அருகாமையில் பல்கலைக்கழக சமுதாய கல்லூரி ஊழியர்கள் தங்கும்வகையில் 8 ஏக்கர் நிலம் வழங்க வேண்டும்.

### சமுதாயக் கல்லூரி

மாஹே பிராந்தியத்தில் பல்கலைக்கழக சமுதாயக் கல்லூரி புதிய கட்டுமானங்களுக்கு 2 ஏக்கர் நிலம் தர வேண்டும்" என்று ஆளுநரிடம் கோரிக்கை விடுத்து, அதுதொடர்பாக மனு ஒன்றையும் அளித்தார்.

மனுவை பெற்றுக் கொண்ட துணைநிலை ஆளுநர் தமிழிசை, "புதுவையை கல்வி கேந்திரமாக உருவாக்கும் நோக்கில், தலைசிறந்த ஆராய்ச்சி உயர் கல்வி நிறுவனமாக புதுவைப் பல்கலைக்கழகத்தை உருவாக்க புதுவை அரசு அனைத்து உதவிகளையும் செய்யும்" என்று உறுதியளித்தார்.

### உள் விளையாட்டு அரங்கம்

பல்கலைக்கழகத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள உள் விளையாட்டு அரங்கை இம்மாத இறுதியில் நேரில் வந்து, திறந்து வைப்பதாகவும் அப்போது ஆளுநர் குறிப்பிட்டார்.

இச்சந்திப்பின் போது பல்கலைக்கழக இயக்குநர் பேராசிரியர் பால கிருஷ்ணன், பல்கலைக்கழக பதிவாளர் டாக்டர் சித்ரா ஆகியோர் உடனிருந்தனர்.

"DINAKARAN"

PAGE NO: 04

DATE: 06.08.21

# புதுவை பல்கலை விரிவாக்க பணிகளுக்கு கூடுதல் நிலம்

## கவர்னரிடம் துணைவேந்தர் வேண்டுகோள்

**புதுச்சேரி, ஆக. 6:** புதுவை பல்கலைக்கழக துணை வேந்தர் குர்மீத் சிங், கவர்னரும், புதுவை பல்கலைக் கழக தலைமை காப்பாளருமான தமிழிசை சவுந்தரராஜனை மரியாதை நிமித்தமாக நேரில் சந்தித்து பேசினார். அப்போது அவர், புதுவை பல்கலைக்கழக காரைக்கால் மைய மேம்பாட்டிற்கு கூடுதலாக 15 ஏக்கர் நிலம், அறிஞர் அண்ணா அரசு கலை கல்லூரி அருகில் மாணவர்களுக்கான புதிய தங்கும் விடுதிகள் கட்ட 3 ஏக்கர் நிலம், ஜிப்மர் விரிவாக்க வளாகத்திற்கு அருகில் பல்கலைக்கழக சமுதாய கல்லூரி ஊழியர்கள் தங்கும் வகையில் 8 ஏக்கர் நிலம் மற்றும் மாகே பிராந்தியத்தில் பல்கலைக்கழக சமுதாய கல்லூரி புதிய கட்டுமானங்களுக்கு 2 ஏக்கர் நிலம் வழங்க வேண்டும் என கவர்னரிடம் கோரிக்கை விடுத்தார்.

மனுவை பெற்றுக் கொண்ட கவர்னர், மாணவர்களின் நலன் மற்றும் புதுவையை கல்வி கேந்திரமாக உருவாக்கும் நோக்கிலும், உலகின் தலைசிறந்த ஆராய்ச்சி உயர் கல்வி நிறுவனமாக புதுவை பல்கலைக்கழகத்தை உருவாக்க புதுவை அரசு அனைத்து உதவிகளையும் செய்யும் என்று உறுதியளித்தார். தொடர்ந்து துணைவேந்தர் குர்மீத் சிங்கின் வேண்டுகோளுக்கு இணங்க பல்கலைக்கழகத்தில் புதியதாக கட்டப்பட்டுள்ள உள்விளையாட்டு அரங்கை இம்மாத இறுதியில் நேரில் வந்து திறந்து வைக்க கவர்னர் ஒப்புக் கொண்டார்.

இச்சந்திப்பின்போது பல்கலைக்கழக இயக்குநர் பாலகிருஷ்ணன், பல்கலைக்கழக பதிவாளர் சித்ரா ஆகியோர் உடனிருந்தனர்.

"DINAMANI"

PAGE NO : 03

DATE: 06.08.21

# புதுவை பல்கலை. விரிவாக்கப் பணிகளுக்கு கூடுதல் நிலம்

## ஆளுநரிடம் துணைவேந்தர் வேண்டுகோள்

**புதுச்சேரி, ஆக. 5:** புதுவை பல்கலைக்கழக விரிவாக்கப் பணிகளுக்குத் தேவையான நிலத்தை அரசு ஒதுக்க வேண்டுமென அதன் துணைவேந்தர், துணைநிலை ஆளுநர் தமிழிசை செளந்தரராஜனை நேரில் சந்தித்து வேண்டுகோள் விடுத்தார்.

புதுவைப் பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத் சிங், புதுவை ஆளுநர் மாளிகையில் துணைநிலை ஆளுநரும், புதுவை பல்கலைகழகத் தலைமைக் காப்பாளருமான தமிழிசை செளந்தரராஜனை புதன்கிழமை மரியாதை நிமித்தமாக நேரில் சந்தித்துப் பேசினார்.

அப்போது அவர், புதுவை பல்கலைக்கழக காரைக்கால் மைய மேம்பாட்டுக்கு கூடுதலாக 15 ஏக்கர் நிலம் வழங்க வேண்டும். அங்கு, அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி அருகே மாணவர்களுக்கான புதிய தங்கும் விடுதி கட்டுவதற்கு 3 ஏக்கர் நிலம் வழங்க வேண்டும்.

ஜிப்மர் விரிவாக்க வளாகத்துக்கு அருகேயுள்ள பல்கலைக்கழக சமுதாயக் கல்லூரி ஊழியர்கள் தங்கும் வகையில் 8 ஏக்கர் நிலம் வழங்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்.

இதேபோல, மாஹே பிராந்தியத்தில் பல்கலைக்கழக சமுதாயக் கல்லூரி புதிய கட்டுமானங்களுக்கு 2 ஏக்கர் நிலம் வழங்கவும், துணைநிலை ஆளுநரிடம் அவர் கோரிக்கை விடுத்தார்.

துணைவேந்தரின் மனுவைப் பெற்றுகொண்ட துணைநிலை ஆளுநர் தமிழிசை, அரசு அனைத்து உதவிகளையும் செய்யும் என்று உறுதியளித்தார்.

இதைத் தொடர்ந்து, துணைவேந்தரின் வேண்டுகோளுக்கிணங்க, புதுவை பல்கலைக்கழகத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள உள் விளையாட்டு அரங்கை இந்த மாத இறுதியில் திறந்துவைக்கவும் துணைநிலை ஆளுநர் ஒப்புக் கொண்டார்.

இந்தச் சந்திப்பின் போது, பல்கலைக்கழக இயக்குநர் பாலகிருஷ்ணன், பதிவாளர் சித்ரா ஆகியோர் உடனிருந்தனர்.